# பாவண்ணன் சிறுகதைகளில் உலக இலக்கியச் சிந்தனைகள்

**திருமதி பெ. லதா,**
**உதவிப்பேராசிரியர், தமிழத்துறை,**
**எம்.எம்.இ.எஸ்.மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,வேலூர்.**

தமிழகத்து எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் பாவண்ணன். தம் எழுத்தாற்றலால் நிலைத்த புகழ்பெற்றவர். இச்சமுதாய நலத்திற்கென தம் சிந்தனைகளை பல்வேறு கதைகளின் வழி வெளிப்படுத்தியவர். இவரின் பன்முகப்பார்வை பரந்து விரிந்திருப்பினும் அவையனைத்தும் சமுதாய நலனையே மையமிட்டவையாக இருக்கும் சமுதாயப் பின்னணியைக் கொண்டே தம் கதை, கவிதை, கட்டுரைகளை இயற்றும் ஆற்றல் பெற்ற இவர் புலப்படுத்தும் சிந்தனைகளைக் காண்போம்.

மக்கள் கூடி வாழ்வதே சமுதாயம். தனி மனிதனால் இலக்கியம் உருவாகிறது. படைப்பாளன் சமுதாயம் தொடர்பான மரபுகளோடும், பழக்க வழக்கங்களோடும், பண்பாட்டோடும் மேலும் பல தொடர்புடைய நிகழ்வுகளோடும் படைக்கின்றான். இதனை, டி. பெர்னால்டு என்பவர் "இலக்கியம் என்பது, ஒரு சமுதாய வெளிப்பாடு"1 என்று குறிப்பிடுகிறார். இலக்கியம் என்பது மொழி என்னும் கருவி கொண்டு வாழ்க்கையைக் காட்டுவதாகும். உலக இலக்கியப் படைப்பாளர்கள் பலரிடத்தும் அவ்வகை ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

படைப்புலகில் பாவண்ணனுக்கென்று தனித்த இடமுண்டு. சமூகத்தின் மீது மிகுந்த ஈடுபாடுடையவர். இவருடைய எழுத்துக்கள் இந்தியச் சமூகத்தில் இருக்கிற நடுத்தர மக்கள் மற்றும் அடித்தட்டு மக்களின் வாழக்கை அனுபவங்களைப் பற்றியே இருக்கும். படைப்பாளன் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும் சமுதாய எழுச்சிக்காகவும் உணர்ச்சியடன் கதைகளைப் படைத்தல் உண்டு. பாவண்ணனும் சமுதாய நோக்கினை முதன்மையாகக் கொண்டு படைக்கும்போது, அதன் அழகுலகம் சமுதாய நோக்கத்திற்கு பயனளித்துவிடுகிறது. தன்னைச்சுற்றி தான் காண்கின்ற அனைத்தையும் சமுதாயம் கொண்டே சமுதாயச் சிந்தனைக் கொண்டதாகப் படைக்கின்றான்.

பாவண்ணனிடம் சமுதாயச்; சிந்தனை சார்நத அழகுணர்ச்சியும் அவரிடம் உண்டு. நீரற்ற வறண்ட குளத்தையும் அதன் மேலே பறக்கும் பருந்தின் நிழல் ஒரு சித்தரத்தைப் போல காட்சி தருவதையும் நோக்கும்போது அவ்வழகுணர்ச்pயானது சமுதாய சிந்தனைக்கு மிகப் பயன்படுகிறது. அதனை கீழ்காணும் தொடரின் வழி உணரலாம்.

"நீரற்று வறண்டு கிடக்கும் குளம். நீர் இல்லாமை குறித்து எவ்வித புகாரும் இல்லை. குறுக்கு வழியில் ஊரை எட்ட அது ஒரு நல்ல தடமாக உதவுகிறது. ஆடுகள் மேயும் இடமாகவும் இருக்கிறது அக்குளம். மேலே பறக்கும் பருந்தின் நிழல் ஒரு சித்திரத்தைப் போல அதன் வறண்ட பரப்பில் காட்சி தருகிறது.' மேலும் 'வறண்ட குளத்தருகே புல்லைத் தின்னும் ஆடு ஒரு மனம். குளத்தை நிரப்பி அதன் இருப்பையும் அழகையும் வசீகரம் மிகுந்ததாக மாற்றிவிடும் நீர் இன்னொரு மனம். - - - - - - - - குளத்துடன்

நெருக்கம் பாராட்ட நினைத்தது ஆட்டின் பேதைமையன்றி வேறில்லை. ஆனால் பேதைமை இல்லாத பிரியம் உலகிலேயே இல்லை."2 என்பதை எடுத்துரைக்கின்;றார்.

சமுதாய சிறுகதை, நாவல்களில் பாவண்ணன் மொழிநடை உத்திகளால் தன் எழுத்துக்களால் தனித்திறனைத் தந்துள்ளார்;. இவரது மொழிநடை உத்திகள் கலைக்கூறுகளாய் அமைந்து அவரது கருத்திற்கு எளிமைத் தன்மையையும், அவரது படைப்பிற்கு முருகியல் தன்மையையும் தருகின்றன. தன் படைப்புகளில் முன்னோர்களின் பாடல் வரிகளையும் நிகழ்கால எழுத்தாளர்களின் படைப்பு வரிகளையும் எடுத்தாண்டு தன் எழுத்திற்கு புதிய பொலிவினையும் தந்துள்ளார்.

சமுதாயத்தின் தாக்கம் இலக்கியங்களில் காணப்படுகின்றது. சமுதாயத்தின் பல்வேறு நிலைகள் படைப்பாளர்களைப் பாதித்தன. அப்பாதிப்பின் பயனாக இலக்கியம் வழி உணர்த்தினர். அது மக்களின் மனத்தினல் பெரும் மாற்றத்தை தமிழர்களிடையே ஏற்படுத்தின. இதனை சமுதாய நடப்பியல் என்றனர். இவ்வகை இலக்கியங்கள் ரு~;ய நாட்டில் அதிகம் தோன்றின. இதனால் சமுதாயத்தில் பெரும் தாக்கமானது அங்கு உருவாயிற்று. இவ்வாறு சமுதாய தாக்கத்தால் உருவாகும் போது சமுதாயத்தின் மொத்த குரலும் படைப்பாளனின் குரலாக ஒலிக்கின்றது.

'மனிதர்கள் அன்புத் தளையால் கட்டப்பெற்று முழு உரிமை பெற்று அனைத்து நிலைகளிலும் சமத்துவமாக வாழும் நிலையை அடையும் போது இம்மண்ணுலகம் தேவலோகமாகப் பூத்துக் குலுங்கும்'3 என்ற சமுதாயக் கோட்பாட்டை n~ல்லி தன் கவிதையில் காட்டியுள்ளார். பாவண்ணனின் 'முள்' என்ற சிறுகதையில் கதையின் நாயகன் அவரின் அலுவலகத்தில் பணிபுரிகின்ற நண்பரை வீட்டிற்கு காணச் செல்வார். நண்பரின் குழந்தைகள் அவர் மேல் உள்ள அன்பால் சித்தப்பா என்றே மகிழ்வோடு அழைப்பார்கள் என்ற அன்பால் கட்டுண்ட நிலையினைக் காட்டுகின்றார். மனிதர்கள் மட்டுமல்லாது பறவைகள், விலங்குகள் மீதும் மிகுந்த ஈடுபாடு உடையவர் பாவண்ணன். பாதுகாப்பு என்ற கதையில் நாய்கள் தன்னை வளர்க்கும் முதலாளியிடத்து கொண்டிருக்கும் பாசத்தை, "அன்பைப் பொழிகிறவர்களிடம் தானே அன்பை எதிர்ப்பார்ப்பவர்கள் ஒட்டுதலாக இருக்க முடியும்"4 என்கின்றார்.

சமுதாயம் நன்கு வளர்வதற்கு, உண்மையான அன்பு வேண்டும்; தூய உடல் வேண்டும்; அறிவின் தெளிவு வேண்டும். இந்த மூன்றும் ஒவ்வொரும் பெறும வகையில் பாடுபட்டால் எதிர்காலத்தில் போட்டியும் குழப்பமும் ஆரவாரமும் இல்லாமல் மக்கள் அமைதியாகவும் இன்பமாகவும் வாழமுடியும் என்று மு.வ. அவர்கள் கூறியது போல் தன் கதைகளை அமைத்துள்ளார் பாவண்ணன். சமுதாயத்தை உடனே மாற்றிவிடவேண்டும் என்று அவர் நினைக்கவில்லை. முயற்சி செய்வது அவர் கடமை. தன் கடமையை எழுத்துக்களால் செய்கிறார்.

"கலை என்பது வெற்றிடத்தே உருவாக்கப்படுவதன்று; குறிப்பிட்ட ஒரு மனிதனின் தனிப்படைப்பு மட்டுமன்று அம்மனிதனே எழுத்தாளன் என்ற முறையில் ஒரு சமுதாயத்தில் வாழ்ந்து, குறிப்பிட்ட அக்காலத்தானும் இடத்தானும் கட்டுண்டு, சமுதாயத்திற்கு விளக்கம் தரும் வகையில் அமையும் ஒன்றாகும்" 5. இவ்வகையில் நோக்கும்போது, பாவண்ணன் தன் கதைக் களத்தில் யதார்த்ததுடன் கூடிய எளிய மக்களின் நிலையில் நின்று சமூகத்தில் நடக்கும் அவலங்களையும் அவர்கள் மீதான தாக்குதல்களையுமே பதிவுசெய்கிறார்.

நடைமுறை வாழ்க்கையில் தொடர்ந்து நிகழ்ச்ச்pகளை உள்ளபடியே கதையைக் கூறுவது எதார்த்தமாகும். தனிநபர்களின் அன்றாட வாழ்வில் ஏற்படும் நடப்பு உண்மையையே அனுபவமாகப்

படைத்திருக்கிறார். ஆறுதல் என்ற சிறுகதையில் தொழிலாளியாக பணிபுரியும் மக்களின் அவலங்களையும் தினசரி நிகழும் வாழ்க்கைப் பிரச்சனைகளைப் பற்றி பேசுகிறது. இன்றைய சமுதாயத்தில் பணம் பெரும் பங்கு வகிக்கிறது. அதனால் மக்களின் வாழ்க்கை அமைதியின்றி செல்கிறது. பணமின்றி ஏழைகளாக நிம்மதியின்றி வாழும் மக்கள் ஒரு புறம், பணமிருந்தும் நிம்மதியின்றி வாழும் பணம் படைத்த மக்கள் மற்றொரு புறம் என நிகழ்கால வாழ்க்கைப் போராட்டங்கள் சமுதாயத்தில் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. மனிதர்கள் ஒவ்வொருவரின் எண்ணங்கள்; திருந்தினால் எல்லாம் திருந்தி நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதை விளக்குகிறார்.

உலக இலக்கியத்தில் ஒவ்வொரு நாட்டின் தேசிய இலக்கியங்கள் தமக்குரிய பாங்குடன் கலந்து அப்பேரிலக்கியப் பரப்பை விரிவுப்படுத்திச் சிறப்பிக்கின்றன என்ற ஹெக்டர் என்பாரின் கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும். சமுதாய நோக்கில் இருவகை உண்டு. ஒன்று சமுதாய அமைப்பை நேராக நோக்கி உண்மையைக் காண்பது. ஒன்று, மற்றொன்று சமுதாய அமைப்பில் உள்ள குறைகளையும் நல்லவர்கள், கெட்டவர்கள் என்று காட்டி எல்லாவற்றிற்கும் அவர்களே காரணம் என்று அவர்கள் மேல் பழி சுமத்துவதாகும். முதல் நிலை நோக்கே சிறந்ததாகும். பாவண்ணனின் சமுதாய நோக்கு மெய்யுணர்வு பெற்ற ஒரு படைப்பாளனின் நேரான நோக்கு ஆகும். பொதுவாக அவரது கதைகள்pல் எல்லா மனிதர்களும் நல்லவர்கள் என்றே சித்தரிக்கப்பட்டிருக்கும். கெட்டவர்கள் அவர்களின் குணங்கள் என்று பெரியதாக எதையும் அவர் எழுதவில்லை. சுpலர் விதிவசத்தால் அப்படி நடந்தகொள்கிறார்கள் என்பது போல் தான் அவர் கதைகள் அமைந்திருக்கும். இது அவரின் சிறப்பாகும்.

பொம்மைக்காரி என்ற சிறுகதைத்தொகுப்பில் உள்ள பெரும்பாலான சிறுகதைகள் பெண்களின் பிரச்சனைகளைப் பேசுகின்றன. ஆண் - பெண் உறவின் சிக்கல்கள், நெருக்கடிகள், பாலியல் உறவும் வன்முறையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. சமூகத்தில் பெண்களுக்கு எதிரான சமூகக் கொடுமைகள் பற்றி பேசுகின்றன. கதையில் அவை பிரச்சாரமாக வலியுறுத்தாமல் கதையின் போக்கில் வாசகரைச் சிந்திக்க வைக்கின்றன. மாற்றம் என்பது நிலையானது. இதை மாற்றுவதற்கு விதி எதுவும் இல்லை என்பர். பெண்களின் பிரச்சனைகளும் பெண்ணடிமையும் அதைப் போன்றது தான். ‘பெண்ணடிமை தீரும் நாள் எந்நாளோ’ என்ற பாரதிதாசன் குரல் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

மனித மனத்தை அறிமனம், அடிமனம் என்பர். இவை மனித வாழ்வில் பெறும் பங்கினையும் சமுதாயக் கண்ணோட்டத்திலும், தனிமனித உளவியல் கண்ணோட்டத்திலும் பகுத்து ஆராய்ந்த பிராய்டின் உளவியல் ஆய்வுமுறையே ‘உளப்பகுப்பாய்வியல்’ என்றழைக்கப்படுகிறது.. தனிமனித நனவிலி மனம் சொந்த அனுபவங்கள், விருப்பங்கள், ஆர்வத்துடிப்புகள் போன்றவறறால் ஆகியது. இவையாவும் முதலில ;புறமனத்திலிருந்து ஆழ்மனத்திற்கு செல்பவை. இவை மனிதனின் நடத்தைகளை நிர்ணயிப்பவை. மனிதர்களின் சூழலமைவுகள் குழந்தைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை பிறரைச் சார்ந்தும் வாழ்கின்றான் என்ற கூற்றினை தன் படைப்புகளில் கையாண்டு;ள்ளார்;.

மனிதனை மனிதனாக அங்கீகரித்தலே மனித உரிமை. மனிதனை அவனது உள்ளார்நத பண்புகளோடு, மாண்புகளோடு சிந்தனை, உணர்வு, தெளிவு என்ற மனித மதிப்புறுதிகளே மனித வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் வழிகோலுகின்றன என்பதை பல்வேறு கதைகளிலும் மிக ஆழமாகவே உணர்த்துகின்றார்.

சூறை எனும் கதையில் வருவாயின்றி இருக்கும் ரயில் நிலையத்தைநிர்வாகம் மூட நினைக்கிறது. ஸ்டேன் மூடாமலிருக்க நியாயங்களைத் தேடி உயரதிகாரிகளுக்கு அறிக்கையும் அனுப்புகின்றார்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

ஸ்டேனில் வேலை செய்வோரின் அவலக்குரல் ‘அப்ப எங்க கதி?’ ‘போய்த்தான் ஆவணும்’ 6 என பிரச்சனைகளின் ஆழத்தையும், விரக்தி நிலையினையும் ஏமாற்றத்தையும் இக்கதையில் அழகாக உணர்த்துகின்றார்..

பாவண்ணனின் கதை கூறும் முறை, ஒவ்வொரு கதையிலும் எழுத்தின் நேர்த்தி, அனுபவம் என சிறப்புற அமைந்து ஆழ அகல சிந்திக்க வைக்கின்றன. இது அவரது படைப்பாற்றலின் தனித்தன்மையை வெளிப்படுத்தும் சிறந்த வாயிலாக அமைந்துள்ளது.

**மேற்கோள்கள்**

டாக்டர் சு. பாலச்சந்திரன், இலக்கிய இயக்கங்களும் திறனாய்வும் - பக்கம். 100.

பாவண்ணன், மனம் வரைந்த ஓவியம் - பக்கம். 19.

இணையம்

பாவண்ணன், கடலோர வீடு – பக்கம் 56.

டாக்டர் சு. பாலச்சந்திரன், இலக்கிய இயக்கங்களும் திறனாய்வும் - பக்கம். 60.

பாவண்ணன், சிறுகதைத் தொகுப்பு – பக்கம். 40.